# ஆத்மஜோதி



கலியுகவரதன்

விரோதிகிருது ௵ ஆவணி ௴ - 1971.





ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி-23 - விரோதகிருது ௵ - ஆவணி ௴ 1ம௳ [17-8-71] - சுடர்-10

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கதிர்காம முருகன் அருள்வேட்டல் | 257 |
| திருமுறைகளில் முருகப் பெருமான் | 258 |
| வழுதி கூனிமிர்த்த பெருமாள் | 259 |
| நல்லூர்க் கந்தசுவாமி கோவில் | 263 |
| ஆலயமணி | 268 |
| இயற்கையே சோதிடம்—15 | 274 |
| ஒப்பற்ற மார்க்கம் | 280 |


ஆத்ம ஜோதி

## ஆத்மஜோதி சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுள்சந்தா | 100-00 |
| வருட சந்தா | 5-00 |
| தனிப்பிரதி சதம் | 50 |

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி போன்: 353

# கதிர்காம முருகன்

கலியுகத்துக் கண்கண்ட கற்பகமே!
கருத்தினிக்குங் கரும்பே! தேனே!
வலியிழந்து பிணியடைந்தேன் மலரடியே
துணையென்று மருந்து கண்டேன்
நலிவழித்துப் பொன்னுடலம் நல்கியருள்
நாயகனே! ஞான நாதா!
கலிகடலில் மலரிலங்கைக் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே!

தீராத பிணியெல்லாந் தீர்த்தருளும்
மருந்தாகித் திகழுஞ் சேயே!
பாராத நாளெல்லாம் பாழ்நாளே
யென்றுணர்ந்தேன் பரமா! நின்னைச்
சேராத பிழைபொறுத்துத் திருவடிக்கே
அன்புசெயுஞ் சிந்தை நல்காய்
காராலுங் கானமர்ந்த கதிரைவேற்
பெருமானே கருணைத் தேவே.



விழியில்லார் விழிபெற்றுர் செவியில்லார்
செவிபெற்றுர் விளம்பும் வாயில்
மொழியில்லா மொழிபெற்றுர் முருக! நின
தருளாலே மூட நாயேன்
வழியில்லா வழிநின்று வளர்ந்தவினை
வேரறுப்பாய் வரதா! மூங்கில்
கழிவில்லார் களியாடுங் கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

—திரு. வி. க. அவர்கள்

# அருள் வேட்டல்

# திருமுறைகளில் முருகப் பெருமான்

''கருகு குழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடைவோமே''

—சம்பந்தர்

ஒருகாலைக் கொருகால் கருமைநிறம் ஏறிக் கொண்டே போகின்ற கூந்தலையுடைய பெண்கள் தெய்வத்தன்மை பொருந்திய குறிஞ்சிப் பண்ணைப் பாடி முருகப்பெருமானது பெருமையைக் கூறுகின்ற திருமுதுகுன்றத்தைச் சேர்வோம்.

''சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன் சீர்பரவி'' —சம்பந்தர்

முருகப்பெருமான் சூரபன்மாவைக் கொல்லப்படை எடுத்த காலத்து திருச்சேய்ஞலூரிற் தங்கி சிவபெருமானை வழிபட்டார்.

''தழை மயிலேறவன் றாதையோ தான்'' —சம்பந்தர்

பீலியோடு கூடிய மயிலில் ஏறுதலையுடைய முருகப் பெருமானுடைய தந்தை.

''மாயச் சூரன்றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே'' —சம்பந்தர்

வஞ்சத்தையுடைய சூரபதுமன் மாயும்படியாகச் செய்த முருகப்பெருமானது தந்தையைத் தொழுது எம்மைப்பற்றி யிருக்கும் வினைகளை அழிப்போமாக!

''வள்ளி முலைதோய் குமரன்றாதை வான்தோயும்
வெள்ளிமலைபோல் விடையொன்றுடையான் மேவுமூர்''

—சம்பந்தர்

குறத்திப் பெண்ணாகிய வள்ளிநாயகியாரை மணந்த செல்லக் குமரவேளின் தந்தையாகிய சிவபெருமான் வெள்ளி மலைபோன்ற இடபத்தை வாகனமாக உடையவர்.

''இளங்குமரன் றன்னைப் பெற்றிமையவர் தம்
பகையெறிவித் திறைவனூரே'' —சம்பந்தர்

பாலசுப்பிரமணியராகிய முருகக் கடவுளை ஐந்து முகத் தோடு அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுகமாக தோற்று வித்தருளியவர். அம் முருகப்பெருமான் தேவர்களின் பகை யாகிய சூரபன்மாவைத் தண்டித்துத் தேவர்களைக் காப் பாற்றியவர்.

# வழுதி கூனிமிர்த்த பெருமாள்

(ஆசிரியர்)

திருஞான சம்பந்தர் முருகப் பெருமானுடைய அவதாரம் என்பது அருணகிரியாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. திருஞான சம்பந்தர் மூன்று வயதுக் குழந்தையாக இருந்த போது உடல் தந்தையாகிய சிவபாத விருதயர் நீரில் மூழ்கிய சமயத்தில் தந்தையைக் காணுது அம்மே அப்பா என்று அழுதார். அத்தருணத்தில் உமாதேவியார் வந்து பொற்கிண்ணத்திலே ஞானப்பால் ஊட்டிய செய்தியை அறிகின்ருேம்.

பல குழந்தைகளும் பல தாய்மார்களும் உள்ள ஒரு இடத்திலே ஒரு குழந்தை அம்மா என்று அழுதால் அக் குழந்தையின் தாய் தானே ஓடிவந்து அக்குழந்தையைத் தூக்குவாள். இதே போன்று ஞானசம்பந்தக் குழந்தை பொதுவில் அழுதபோது உரிமை நோக்கி உமாதேவியார் ஓடோடியும் வந்து ஞானப்பாலே ஊட்டினுர். தனிமையில் வராது ஞானத் தந்தையாராகிய சிவபிரானையும் அழைத்து வந்து குழந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கின்ருர். தாய் தந்தையை அறிமுகம் செய்துவைப்பதுதானே உலக வழக்கம்.

குழந்தையின் வாயிலே பால் சிந்தியிருப்பதைக் கண்ட சிவபாத விருதையர் ''யார் உனக்கு பால் தந்தார்'' என அதட்டினுர். குழந்தை அதற்குப் பதிலாக தோடுடைய செவியன் எனப் பதில் கூறியது. தோடு என்பதால் உமா தேவியாரையும் செவியன் என்பதால் சிவபிரானையும் உணர்த்தி நின்றமை ஞானக் குழந்தையின் சம்பந்தத்தைப் புலப்படுத்தி நின்றது. ஞானசம்பந்தக் குழந்தை தனக்கும்

உமாதேவியாருக்கும் இடையில் உள்ள சம்பந்தத்தை முதன் முதல் பாடிய தேவாரத்தில் முதன் முதல் கூறிய இரு சொற்களாலுமே விளங்கவைத்து விட்டது. ''எனது தாயும் தந்தையும் பகவதி அம்மையும் நீங்களும் அல்ல, உமாதேவியாரும் சிவபிரானுமே'' என்பதைத் திருஞானசம்பந்தக் குழந்தை சிவபாத இருதயருக்கு உணர்த்தாமல் உணர்த்தியுள்ளார்.

இச்செய்தியை அருணகிரிப் பெருந்தகை ஆழ்ந்து சிந்தித்தார். முருகப்பெருமான் ஒருவருக்குத்தானே உமா தேவியார் பால் ஊட்ட முடியும். தந்தைக்குப் பிரணவ உபதேசம்செய்யும் அளவுக்குஞானம்பெற்றகுழந்தை அல்லவா? ஒவ்வொரு தேவாரப்பதிகத்தின் இறுதியிலும் சம்பந்தர் தனது ஞானப் பெயராகிய ஞான முத்திரையிட்டுப் பதிகத்தைப் பூர்த்தி செய்துள்ளார். இதே போன்று சிவனைப் பற்றியே பாடவந்த சம்பந்தர் முருகனைப்பற்றிப் பத்து இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அப்பரதும் சுந்தரரதும் தேவாரங்களிலே அவர்கள் தாம் பட்ட கஷ்டத்தையும் அதை நிவர்த்தி செய்யுமாறும் வேண்டிய பதிகங்களே அதிகம். சம்பந்தரது பாடல்களிலே சிவபிரானது பிரபாவங்களையே அதிகம் காணலாம். தந்தையைப் பற்றிக் குழந்தை தானே நன்கு அறியும்.

''வேந்தனும் ஓங்குக'' என்று வாழ்த்துக் கூறியதன் மூலம் சம்பந்தப்பெருமான் பாண்டியனின் கூன் முதுகை நிமிர்த்தியதோடு மாத்திரம் அல்லாமல் அவனது உள்ளத்தையும், சமணர்களது உள்ளத்தையும் நேராக்கினுர். இதே போல கதிர்காமப் பெருமானும் தன்னுடைய அடியார்களுடைய உள்ளக் கோணலையெல்லாம் போக்கி உள்ளத்தை நேர் செய்து கொண்டிருக்கும் அற்புதம் இன்னும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சம்பந்தர் ஒரு ஏட்டை நெருப்பிலே இட்டுத் திருமுறையின் பெருமையை விளக்கினுர். கதிர்காமத்திலோ ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் அக்கினியிலே புகுந்து கதிர்காம முருகப் பெருமா

னது பிரபாவத்தை விளங்கவைத்துக் கொண்டிருக்கின்றனர் கள். வைகையிலே சம்பந்தருடைய ஒரு ஏடு எதிரேறியது. மாணிக்ககங்கையிலே ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான அடியார்கள் தீர்த்தமாடிப் பிறவிக்கடலில் எதிர்நீச்சல் நீந்திக் கரையேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டேதான் அருணகிரிப் பெருந்தகை:.

''வழுதி கூனிமிர்த்த பெருமாளே''

எனக் கதிர்காமத் திருப்புகழில் வைத்துள்ளார்.

சம்பந்தப்பெருமான் தான் பாடிய பதிகங்கள் தோறும் 8 ஆம் திருப்பாடல்களில் இராவணனைக் குறிப்பிடுதல் மூலம் ஈழத்திற்கு முதன்மை கொடுத்துள்ளார். சம்பந்தப் பெருமானது பதிகங்களில் ஈழத்தைப் பற்றிக் குறிப்பிடாத பதிகங்களே இல்லை என்று கூறலாம்.

இறைவனைப் பக்தி செய்ய நினைந்த பக்தர்கள் எல்லாம் இறைவனது திருவடியையே குறிப்பிட்டுள்ளனர். வள்ளுவர் ''வாலறிவன் நற்றாள்'' என்றார். காரைக்காலம்மையார் புராணத்தில் சேக்கிழார் பெருமான் ''அறவா நீ ஆடும்போது நின் அடியின் கீழிருக்க'' எனக் குறிப்பிடுகின்றார்.

''திருவடி ஞானஞ் சிவமாக்குவிக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே''

என்பது திருமூலர் திருவாக்கு. திருவடியுணர்வு ஆருயிர்களை மும்மலப் பிணிகளினின்றும் செம்மையும் விடுவிக்கும். அவ்வுணர்வே கிடைத்தற்கரிய திருவருட் சித்திகளை எய்துவிக்கும் அதுவே சிவ உலக வாழ்வினைச் சேர்ப்பிக்கும். அவ்வுணர்வே சிவமாம் பெருவாழ்வையும் கூட்டுவிக்கும்.

பக்தி ஒன்றினால்தான் இறைவனது திருவடியை இடைவிடாது இதயத்தில் இருத்த முடியும். முருகப்பெருமானை முழு உருவில் தியானம் செய்ய நினைத்த அருணகிரியார் ''திருவடியும் தண்டையும் சிலம்பும்'' என முதலில் திருவடியையே அறிமுகம் செய்து வைக்கின்றார்.

யோகிகள் தம் உடம்பிலுள்ள ஆறு ஆதார சக்கரங்களுக்கும் முருகப்பெருமான் விரும்பி உறைகின்ற ஆறு படை வீடுகளைக் குறிப்பிடுவர். ஏழாம் இடமாகிய சகஸ்ராரத்திற்கு கதிர்காமத்தைக் குறிப்பிடுவர். சகஸ்ராரம் ஆயிரம் இதழ் தாமரையாக உருவகிக்கப்படுகிறது. கதிர்காமமும் சோதியாக விளங்குகின்றது. இதனால் பக்தர்கள் கற்பூரம் எரித்து முருகப்பெருமானைச் சோதியாகக் காண்பர். அதனால் விபூதிநிலை அடைந்த மனத்தை உடையராய் உடலிலும் விபூதி அணிவர். வெறும் மண்ணாக இருந்தமனோநிலைவிபூதிநிலைக்குஉயர்ந்தததத்துவத்தைவிளக்குவது கதிர்காம விபூதியாகும். உடலில் அணியும் விபூதிபோல உள்ளமும் கதிர்காமத்தைத் தரிசிப்பதால் விபூதிநிலை அடையவேண்டும்.

இவற்றையெல்லாம் அனுபவத்தில் உணர்ந்த அருணகிரிப் பெருந்தகை முருகப்பெருமானது திருவடியை இடைவிடாது நினைக்கும் பாக்கியத்தை அருளுமாறு கதிர்காமப் பெருமானிடம் வேண்டுதல் செய்கின்றார். நாமும் அவர் வழிநின்று வேண்டுதல் செய்தால் நமக்கும் தவறாது முருகப் பெருமான் திருவடி ஞானம் கிட்டும்.

''எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாள் நினைப்பை யிருபோதும்
இதயவாரிதிக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுரவாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே''

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

—(திரு. குல. சபாநாதன்)—

பண்டைத் தமிழ் மக்கள் வெற்றி வேல் முருகன் பால் அளவிறந்த உறுதியும் நம்பிக்கையும் கொண்டுவாழ்ந்து வந்தனர். வட மாகாணத்தில் ஆறு குமரக்கோட்டங் களுண்டு. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், செல்லச்சந்நிதி முருகன் கோயில், முல் லைத்தீவு குமாரபுர சித்திர வேலாயுதர் ஆலயம், கந்தவனக் கடவை கந்தசுவாமி கோயில். இணுவில் கந்தசுவாமி கோ யில் என்னும் ஆறுகோயில்கள்உண்டு. இவற்றுள்தலைசிறந்து விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும்.

## கோயில் ஸ்தாபகர்

பதினன்காம் நூற்றுண்டு தொடக்கம் யாழ்ப்பாணத் தினை ஆரியச்சக்கரவர்த்திகள் ஆண்டு வந்தனர். அவர்கள் நல்லூரை இராசதானியாக்கினர். கோட்டை அரசனுகிய ஆருவது பராக்கிரம வாகுவால் அனுப்பப்பெற்ற செண்பகப் பெருமான் என்பவன் யாழ்ப்பாணம் வந்து அங்கு ஆட்சி புரிந்த அரசனை வென்று, கி. பி. 1450-ம் ஆண்டளவில் நல் லூரை இராசதானியாக்கி, சிறிசங்கபோதி புவனேகவாகு என்னும் சிங்கள நாமத்துடன் பதினேழு வருடங்களாக அர சாண்டு வந்தான். இவ்வரசன்தான் நல்லூர் ஆலயத்தை முதன்முதலாகக் கட்டுவித்தவன் எனக் கருதப்படுகின்றுன். நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் கட்டியத்தில், "சூர்யகுலவம் சோத்பவ சிறிசங்கபோதி புவனேகவாகு" என இவன் இன் றைக்கும் வாழ்த்தப்படுகின்றுன். அரசன் அமைத்த கோயி லாதலின் நல்லூர்க் கோயில் முதற்கண் மிக விசாலமாகக் கட்டப்பட்டிருத்தல் கூடும் என ஊகித்தற்கிடமுண்டு. கி. பி. 1478-ம் ஆண்டளவில் அரசாளத் தொடங்கிய சிங்கைப்

பரராசசேகரன் கந்தசுவாமி கோயிலுக்கண்மையில் ஓர் ஏரி தோண்டி யமுனாநதியின் திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளிற் கொணர்வித்து அவ்வேரிக்குள்ளே பெய்வித்து அதனை யமுனா ஏரி (யமுனாரி) எனப் பெயரிட்டழைத்தான். நல்லூரிலுள்ள கிறிஸ்த தேவாலயத்துக்கருகில் பகரவடிவினதாகிய இந்த ஏரியை இன்னுங் காணலாம். சிங்கைப் பரராசசேகரன் இக் கோயிலை நடுநாயகமாகக் கொண்டு நான்கு திசைகளிலும் நான்கு கோயில்களை அமைத்தான்.

## போர்த்துக்கேயர் கோயிலை அழித்தல்

பின்பு பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். இவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் தரைமட்டமாக்கி, அது இருந்த இடமும் தெரியாதவாறு அத்திவாரத்தையும் கிளறுவித்தார்கள்.

## இரகுநாத மாப்பாண முதலியார்

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மறுபடியும் தலைகாட்டத் தொடங்கியது. ஒல்லாந்த அதிகாரிகளின் அநுமதிபெற்று இரகுநாத மாப்பாண முதலியார் ஒரு சிறு மடாலயத்தை நல்லூரிலே தாபித்தார். இக்கோயிற் கட்டியத்தில் இவரும் வாழ்த்தப்படுகின்றார். இது பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கட்டப்பெற்றதெனக் கருத இடமுண்டு. இரகுநாத மாப்பாண முதலியாரின் வழித்தோன்றல்களே இக்கோயிலை இன்றுவரை பரிபாலித்து வருகின்றனர்.

## தற்போதைய கோயில் அதிகாரி

இப்பொழுது குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் கோயிலதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். நித்திய

நைமித்தியங்கள் கிரமமாக நடைபெறச் செய்து கோயிற் பூசகர்களையும் பணியாட்களையும் திருப்திப்படுத்தி பரிபாலித்துவருவது மிகவும் கஷ்ட சாத்தியமான காரியமாகும். ஆனால் திரு. குமாரதாஸ் மாப்பாண முதலியார் கோயிற் காரியங்களைத் திறம்பட நடாத்தி, பொது மக்களின் நன் மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளார். வீண் வார்த்தைகள் பேசாது தான் எடுத்துக்கொண்ட கருமத்தில் கண்ணுங் கருத்துமாய் அல்லும் பகலும் ஓயாது உழைத்துவருவதால், இவருடைய மதிப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளது. கோயிற் கட்டடங்களில் அநேக திருத்தஞ் செய்து வருகிறார்.

## காலநேரம் தவறாமை

பூசைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள் ஆதியாம் நித்திய நைமித்தியங்கள் யாவும் குறிக்கப்பட்ட காலநேரம் தவறாமல் கிரமமாக நடைபெற்று வருகின்றன. எக்காரணத்தை முன்னிட்டும் எக்கிரிகையும் குறித்த நேரம் தாழ்த்தி நடைபெறுவதில்லை. இத்தகைய சிறந்த ஒழுங்கு முறையினை இலங்கையில் மிகவும் அரிதாகவே காணமுடியும்.

## சிறந்த கோபுரம்

சிறந்த சிற்பவேலைப்பாடமைந்த அழகிய ஐந்தடுக்குக் கோபுரம் ஒன்றும் அதன் இருமருங்கிலும் அழகிய மணிக் கோபுரங்களும் கீழைக்கோபுரவாயிலை அலங்கரிக்கின்றன. இக்கோபுரத்தின் மத்தியில் ஒரு விலையுயர்ந்த மணிக்கூடு நேரத்தைக் காட்டுவதுடன், காலந் தவறாது கருமங்களைச் செய்து முடிக்குமாறு கோயிற் பணியாளருக்கு நினைவூட்டுகின்றது. ஆறுமுக சுவாமி வாயிலையும் அழகிய கோபுரம் அலங்கரிக்கின்றது.

## திருவிழாச் சிறப்பு

ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் நடைபெறும் திருவிழாவுக்கு இலங்கையில் பல திசைகளிலுமிருந்து பக்த கோடிகள்

வந்து கூடுவது வழக்கம். திருவிழா 25 நாட்கள் நடைபெறும். முதலாம் தினத்தன்று கொடியேற்றம். 10-ஆம் நாள் மஞ்சத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். 19-ஆம் நாள் கைலாச வாகனத்தில் முருகன் வீதிவலம்வந்து அடியார்களுக்குக் காட்சியளிக்கிறார். 22-ஆம் நாள் தண்டாயுதபாணி உற்சவம். 23-ஆம் இரவு நல்லைக்கந்தர் அழகிய சப்பரத்தில் பவனி வருவார். 24-ஆம் நாள் தேர்த்திருவிழா. முழுமதியன்ன ஆறு முகங்களும் அழகிய கரமீராறும் அணிமணித்தண்டையார்க்கும் செழுமலரடியும் கொண்ட ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை நாயகியார் சமேதராக அழகிய தேரின் மீதிவர்ந்து பக்தர்களுக்கு அருள்புரியும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். 25-ஆம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். இதிலும் அளவிடற்கரிய எத்தனையோ லட்சக்கணக்கான அடியார்கள் பங்கு பற்றுவார்கள். 26-ஆம் நாள் பூங்காவனத் திருவிழா, மாலை 6-30 மணிக்கு மிக அழகாக நடைபெறும்.

## சுகாதார ஏற்பாடுகள்

சில ஆண்டுகட்கு முன்னர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் அடியார்கள் மனவமைதியுடன் நின்று கந்தனை வந்தனை செய்ய முடியாதிருந்தது. ஆனால் இப்பொழுது கோயிலதிகாரியும் யாழ்ப்பாண நகரசபையாரும் சுகாதாரப் பகுதியினரும், தொண்டர் சபையினரும், சாரணச்சிறுவரும், பொலிசாரும் ஒருமுகமாக ஒத்துழைத்து ஆச்சரியப்படத்தக்க வெற்றியீட்டியுள்ளனர். தேவையான இடங்களில் மலசலகூடங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஏற்ற இடங்களில் தண்ணீர் வசதிகளும் துப்புவதற்கு ஏற்ற பாத்திரங்களும், குப்பைத்தொட்டிகளும் அமைத்திருக்கிறார்கள்.

சுகாதார சுலோகங்கள் பொறித்த அட்டைகள் மூலம் சுகாதாரத்தைக் கைக்கொள்ளுமாறு அடியார்களுக்கு நினைவூட்டுகின்றார்கள். வீதிகளில் கடைகளும் தட்டிக் கடை

களும் இப்போது கிடையா. பொலிஸ் நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கும். கோயில் வீதியில் நிறுவப்பட்டுள்ள ஒலிபெருக்கி மூலம் சுகாதாரத்தையும் பக்தியையும் அபிவிருத்தி செய்வதற்குரிய பிரசங்கங்களும் இசைக் கச்சேரிகளும் நடைபெறுகின்றன. இறைவனை வழிபடச் செல்வோர் மூடபக்தி காரணமாகச் சுகாதாரத்தைப் புறக்கணிக்கக் கூடாது. இதனைப் பேணுவதில் நகரசபையதிகாரிகளுடனும் கோயிலதிகாரியுடனும் பொது சனங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

## முருகப் பெருமான் ஆட்டுக்கிடாவை வாகனமாக்கிய வரலாறு

ஒரு சமயம் நாரதர் ஒரு பெரிய வேள்வி ஒன்று நடத்தினர். ஏராளமான ஆடுகளும் இதர ஜீவராசிகளும் பலியாகக் கொடுக்கப்பட்டன. குற்றமற்ற ஆடுகளைத் தீயிலிடுகிற அநியாயத்தைப் பொறுக்க முடியாது போன்று நாரத முனிவர் விரும்பி வளர்த்த வேள்வித் தீயினின்று செம்மறியாட்டுக்கிடா ஒன்று தோன்றி மண்ணுலகத்து உயிர்களையும், விண்ணுலகத்து உயிர்களையும் அழிக்கத் தலைப்பட்டது. தேவர்களும், நரர்களும் கலங்கினர். முருகனிடம் முறையிட்டனர். சிவந்த கண்களுடைய அந்த ஆட்டுக்கிடாவை யாராலும் பிடிக்கவோ அடக்கவோ முடியாதிருந்தது. முருகன் ஏவுதலின்படி நவவீரருக்குள் முதல்வராகிய வீரவாகுதேவர் அந்த ஆட்டுக்கிடாவைப்போய்ப்பிடித்துக்கொண்டு வந்து முருகக் கடவுளின் முன்னிலையில் விட்டு 'இதனை ஊர்தியாகக் கொண்டு செலுத்தியருள் வீராக' என்று வேண்ட முருகப் பெருமானும் அதை ஊர்தியாகக் கொண்டார்.

# ஆலயமணி

—திருமதி. பத்மாவதி சுப்பையா—

உலகில் தோன்றிய உயிர்க் கூட்டத்தில் பெருமை வாய்ந்த, இந்த மனித உயிர்க்கூட்டம், இன்பத்தையே பெரிதும் விரும்புகிறது. உலகில் அநுபவிக்கும் இன்பம். இருப்பதுபோல் தோற்றம்; பின் மறைந்து துன்பமாய் தெரிகிறது. அப்படியானுல், மெய்யான இன்பம் எது? அதை அடைவது எப்படி? என்று என் உள்ளுணர்வு துடிக்கின்றது.

''குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்''

மழலைச் சொல் இனிமையைப் புலப்படுத்துகின்றது.
(சிறந்த இன்பம்)

மனித வளர்ச்சி தன்மையையும், கலைகள் வளர்ச்சி தன்மையையும் இன்று ஒப்பிட முடியாத நிலையில் நாம் இருந்தாலும், மனிதனுடைய தொடக்கம் முதல், முடிவு வரை பிரிக்க முடியாத ஒரு கலை அவனேடு ஒடுங்கி உள்ளது. அது நாதக் கலை.

தாயின் வயிற்றில் இருந்து பிறக்கும் போதே அம்மா! என்ற அழுகை ஒலியுடன் பிறக்கும் குழந்தை அழுது கொண்டும், சிரித்துக்கொண்டும், ஒலியின் பாகுபாட்டை நிரூபிக்கிறது. அது வெறுங்கண்ணீரும், முக மலர்ச்சியும் கொண்டு இல்லை சிறு சிறு ஒலிகளோடும், அசைவுகளோடும் கூடி சிரிக்கும் போது, ஒரு அசைவும், ஒலியும் அழும் போது ஒரு அசைவும், ஒலியும் காணப்படுகின்றது. இந்த உபமானத்தைக் கொண்டே, மனிதனும் தன் இன்ப, துன்ப உணர்ச்சிகளை, சிரிப்பு, அழுகையின், ஒலிகளோடு கலந்தே புலப்படுத்த வேண்டியுள்ளது. மனித வளர்ச்சியின் அடை

வில், இரண்டே ஒலித்தன்மையாக இருந்த ஒலி; பலவேறு வகையாகப் பாகுபாட்டில் வளர்ந்து அமைகிறது. இவ்வொலி இயல், இசை, கூத்து, என முத்தமிழாக மிளிர்கிறது. இவ்வொலி, மனிதனிடம் மாத்திரம்தான் காணப்படுகிறதா? கடலில், மலையில், உலகெங்கும் நாதமயமாக இருக்கிறது. தேமேவும் நாதமும், நாதாந்த முடிவுமாக பரசிவத்தினிடத்தே தோன்றியது. எப்படி? (''ஓதிய ஐந்து ஓங்காரத்....நின்றோனே....'' கந்தர் கலிவெண்பா 59.)

## விளக்கம்:- ஐந்து ஓங்காரம்-

அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்னும் ஐந்து உறுப்புகளுடைய, பிரணவம், இதனை ''அகர, உகர, மகர, விந்து, நாதம் ஆகிய அக்கரமைந்து- ..................'' என வரும், சிவஞானதீபம்-122-ம் செய்யுளடியால், அறிக. இவற்றுள், அகர, உகர, மகரங்களாக, விரிந்தபோது மூன்றெழுத்தாயும், ''அகர, உகர, மகரம் இம் மூன்றுங் கூடி, ''ஓம்'' என்று ஒலிக்கப்படும் போது நாதமாயும் 'ஓம்' என்று வரிவடிவு கொள்ளும்போது, விந்துவாயும், விளங்கும். முதல் மூன்றெழுத்தும், ஒலிவடிவும், வரிவடிவும் கூடிய போது ஐந்தாம் என்க. பிரணவம், சமட்டிப் பிரணவம், வியட்டிப் பிரணவம் என இருவகைப் படும். சமட்டிப் பிரணவம், ''ஓம்'' என நிற்பது. வியட்டிப் பிரணவம் அகர, உகர, மகர, விந்து, நாதம், என நிற்பது. சமட்டி—தொகுத்துச் சொல்வது. வியட்டி,-பகுத்துச் சொல்வது. ''ஓங்காரத்துள்ளொளிக்கு, உள்ளொளியாய் ஓங்காரத்துள்ளொளிக்குள்ளே மூருகனுருவங்கண்டு'' என்பது, கந்தரலங்காரம், 55ம் பாடல் அடி. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் முறையே, பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளாய் இருந்து நடாத்துகின்ற முதல்வன் நீயே என்பார். ''ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய் நின்றோனே'' என்றார் ஆதிகுமரகுரு சுவாமிகள். கந்தர்கலிவெண்பாவில்.

''நவின்று பல கலை நாத விந்துவாதி'' என (சிவப்பிரகாசம்) கூறுகிறது. வழிபாட்டு முறையால் உள்ளம் பரிபக்குவம் பெறும்வரை, (நற்காணம் நண்ணுதலும்—கந்தர் கலி வெண்பாவில்) மனம் புதைந்து வழிபாட்டில் ஒருமைப்படவேண்டும். நாம் பிறக்கும் பொழுதே நம்மோடிசைந்து அல்லவா இந்த நாதமும் ''அம்மா!'' என்று குரல் கொடுத்து வருகின்றது. ஆம், அந்த நாதம் நம்முடன் கூடவுதித்தது. ஆன்மாவும் —ஆணவமும் பிரிக்க முடியாதது போல, சாத்விகவிந்துவிலிருந்து நாதத்தைப் பிரிக்க முடியாது. நெருப்போடு சூடு கலந்திருப்பது போல், உயிரோடு நாதம் கலந்திருக்கிறது. எப்படியெனில்,

> ''நாத விந்துக லாதீ நமோ நம
> வேத மந்திர சொரூபா நமோ நம
> ஞான பண்டித சுவாமி நமோ நம வெகுகோடி''
> (திருப்புகழ்)

ஆணையில் நீக்கமின்றி நிற்கும் குகசக்தியே, பராசக்தியே, இச்சா, ஞான, கிரியா சக்தியாக ஆன்மாவின் சகசமலத்தைக் கெடுத்து முத்திப்பேற்றை கொடுக்க மூவகை வடிவாகவும், ஐந்தொழிற்கும் காரணமாயும், நாதமாயும் அமைந்துள்ளது. கலா தத்துவங்களுக்கெல்லாம், ஆதியாய் அமைந்தது. (கலையே அவயவமாய் காட்டும் அத்துவாவின் நிலையே வடிவமாய் நின்றோய்) -கந்தர் கலிவெண்பா.

அத்துவா என்றால், மார்க்கம் அல்லது வழி. என்னவழி? சனனத்திற் புகாதபடி முத்தியிற் கூட்டும் வழி. ஆன்மா கடைத்தேற அத்துவசுத்தி பெறவேண்டும். இவைகளை பின் பற்று சைவன், கோலின்றி நடந்த குருடன் ஆவான். ''சிவ தீக்ஷை'' பெற்றவர்களுக்கே அன்றி, அத்துவா போதிக்கப் படாது. இது சைவ நியதி.

## அத்துவா தத்துவங்கள் யாவை?

1 மந்திராத்துவா 2 பதாத்துவா

3 வன்னுத்துவா 4 புலனுத்துவா
5 தத்துவாத்துவா 6 கலாத்துவா

இவை சொல்வடிவும், பொருள்வடிவுமானது. தன்மை வேறுபாட்டால் மூவகைப்பட்டு ஆறு அத்துவாக்களும், பதி னெட்டாகும்.

மெய்ஞ்ஞானம் தரும்சிவசொரூப பரம்பொருள், ஆவிப் புலனுக்கு அறிவு அளிக்க அ த் து வா க் க ளை வடிவாகக் கொண்டு பிரணவத்தின் உள் ஒலியாய் நின்று, ஐந்தொழில் புரிந்து. அத்துவசுத்தி, அதாவது ஆறு அத்துவாக்களிலும் உள்ள சஞ்சித கர்மங்களை நசிப்பித்து முத்தி அருளி நிற்பர்.

கலா அத்துவாக்களுக்கெல்லாம் உயிராய், உலகிற்கே உயிராய், சிவனும், குகனும், ஓங்கார வடிவான நாத பிரமமாகிய பிரணவநாதமே இந்நாதம் பரப்பிரம வடிவம். இதன் பாதமே நான்கு வேதம். சகல உயிர்க் கூட்டத்தை தன் வயத்தே வயப்படுத்துவதால் பிரணவம் எனப்படுகிறது.

'நற்றவத்தோர் தாம்காண, நாதாந்தத்தஞ்செழுத்தால்,
உற்றுருவாய் நின்றுடல் உள்ளபடி பெற்றிடநான்,
விண்ணூர் பொழில் வெண்ணெய் மெய்கண்ட நாதனே,
தண்ணூர் அருளாலே சாற்று' (உண்மை விளக்கம்)

இறைவன் நாதவடிவாய் இருப்பதாலேதான், நாதன் என அழைக்கப்படுகின்றூர். நாதத்துடன் சேர்ந்ததே பரம் நாதம் ஆன்மாவை பரம்பொருளுடன் ஒன்றுச் செய்வது. (அருவி, கடல், சங்கு, வண்டு இவைகளின் நாதம் மனதை கவரும் தன்மையுடையது.) நாதம் ஓர் தத்துவம். அதற்கு மேம்பட்ட தத்துவம் இல்லை. பரம்பொருளுக்கு மிக சமீ பத்தில் நாதம் இருத்தலால் அது, 'நாதபிரமம்' என அழைக்கப்படுகிறது. 'ஏழிசையாய், இசைப்பயனுய்,' என் ரூர் வன்ரெண்டர். மணி ஓசையில் ஆரம்பிக்கும் பூஜை, மந்திர ஒலியில் முடிகிறது. நாதத்தில் தொடங்கி, நாதத் தில் முடியும் பூஜை மூர்த்த ஒவியத்தில்: வயப்பட்டு உள் ஒலி பெறுகிறது.

அருட்ஜோதி தெய்வமாகிய, நடராஜபதியின்காட்சிக்கு முன், அடையும் ஒலியே, தாயகமாகவுள்ள ஓங்கார ஒலி. இந்த ஒலியே, நாதஞ் சொல்கின்ற சிற்றம்பலம். அங்கே ஒளி வடிவாகிய பாதஞ் சொல்கின்ற பக்தரைக் காணலாம். விந்தாகிய பரு உலகைக் கடந்து, நாதவடிவாகிய நுண் உலகை சேர்ந்து, இறை மகிமை இன்ப சுகவடிவை, அறிவை, ஜோதியாய் காணும் சுகம் பெறலாம். எப்படி?

'நாதாந்த திருவீதி நடந்து கடப்பேனே,
ஞானவொளி நடுவின்ப நடந்து தரிசிப்பேனே,
போதாந்தத் திருவடியென் சென்னி பொருந்திடுமோ,
புதுமையறச் சிவபோகம் பொங்கி நிறைந்திடுமோ'—

என்கிறார், திரு அருட்பா தந்த, வள்ளலார் இராமலிங்க சுவாமிகள். நாதத்தத்துவத்தில், சுத்தம் என்னும் ஒளி வழியில் ஆன்மா தனித்து தோயும்போது, சிவமே நாதமாயிருப்பது புலனாகும். 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்கிறார் அப்பர் சுவாமிகள். ஆம், அவ்வொலி 'ஓம்' என்னும் அடியினின்றும் பிறக்கிறது. இந்த நாத முடிவை தொடர்ந்து நிற்பது போதம். மணியோசைக்குப் பின்னே யானை வருவது போல.

போற்றும் நாதமுடிவில், நடஞ்செய் கமலபாதனாகிய அறிவெனும் ஜோதியைக் காண, என் செய்வோம்?

எப்போதும், புறத்தே நாடி, மயக்குறும் புலன்களை ஒடுக்க திருவருளை, சிவபரத்தை, நித்தமும், ஆலயமணி ஓசை கேட்டதும், விழிப்பு உணர்வோடு, கோயில் வாய் அடைந்து, நினைந்து நினைந்து, பணிந்து பணிந்து, உருகியுருகி, பொறிபுலன் காண, சேட்டையை ஒடுக்கி ஒடுக்கி, தணிந்து தணிந்து, கனிந்து கனிந்து, நினைந்து நாதமந்திர ஒலியோடு ஒன்றி, எம் குறையை விண்ணப்பிக்க, புற ஒலி கெட்டு, அக ஒலி எழும். ஆன்ம செவி மெய்யுணர்வு பெற்று நாதத்துக்கும், போதத்துக்கும், இடையிலேயே, ஆணவம் அறுபட்டு, சீவன் சிவனுடைமையாகல் வேண்டும். சீவன், சிவன் தந்தையாக உணரும் தருணம்.

இவ்வுலகமே நாதவடிவான, ஓங்காரமயமான அதன், அரவணைப்பில் நிகழ்கிறது. இந்த நாதாந்தக் கூத்து திரு மந்திரத்தின் கூற்றுப்படி,

**வேதங்கள் ஆடமிகும் ஆகமம் ஆட**
**கீதங்கள் ஆடக்கிளர் அண்டம் ஏழ் ஆட**
**பூதங்கள் ஆடப்புவனம் முழுதாட**
**நாதங் கொண்டாடினுன், ஞானனந்தக் கூத்தே!**

அவனருளாலே, அவன் தாள் வணங்கி, புற உலகின் ஒலிகளால் அடைபட்ட காதற்ற இம் மனித உலகம், நாத தத்துவத்தால், போதத்தத்துவத்தைப் பெற்று, ஞானனந்த சுடரின் இன்னெலிமை அடைவோமாக. ஆலயமணியில் எழுந்த ஒலி, இறையொலியாகிய, பொன்னடியில் எல்லா உயிர்க் கூட்டத்தையும், உய்ப்பித்து சேர்க்க வேண்டும் என, குருநாதன் திரு அருள் முன்னிற்க பணிவோமாக. அம்மை அப்பனுகிய ஒப்பிலாமணியை தியானிக்கவே, ஆலயமணி நம்மை, அழைக்கிறது வாருங்கள்! வணங்கி, சத்தத்தினுள் ளே, சதாசிவம் காணலாம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

---

## மயிலூர்தி

சூரபதுமனை வதைசெய்ய முருகன் போருக்கு ஆயத்த மான காலத்து இந்திரன் மயிலாக மாறி செவ்வேளுக்கு வாகனமாக அமைந்தான்.

சூரபதுமன் மாமரமாகத் தோன்றின காலத்து ஆறு முகன் தன் வேலால் அம்மரத்தை இருகூறுகப் பிளந்தார். மரத்தின் மேல் பாகம் சேவலாகவும்அடிப்பாகம் மயிலாகவும் மாறின. மாறிய மயிலைத் தனது வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டருளினுர் முருகவேள்.

அனுதியான சகல வேதங்களும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி யை துதிக்க முயன்றும் மனேவாக்குக் கெட்டாத மகிமை யோடு கூடிய முருகன் திருவுருவ வர்ணனையைத் தாம்போ திக்க முடியாது போனமையால் எல்லா வேதங்களும் ஒன் ருகச் சேர்ந்து மயில் உருவங்கொண்டு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு வாகனமாகி நிம்மதி அடைந்ததாகவும் சொல் லப் படுகிறது.

# இயற்கையே சோதிடம்

(ச. இ. அப்புத்துரை சோதிடன் - வெள்ளவத்தை)

பாடம்: 15

## வானசாஸ்திரம் சூரியன்

சிவ சூரியன், சூரிய நாராயணன், ஆயிரம் சோதி உள்ளோன், பரிதி, பார்க்கரன், ஆதித்தன், பனிப்பகை சுடர்பதங்கன், இருள்வலி, சவிதா, சூரன் எல், மார்த் தாண்டன், அருணன், ஆதவன், மித்திரன், தருணி, செங்கதிரோன். சண்டன், தபனன், ஒளி, சான்றோன் ஊழியன், ரவி முதலிய பல நாமங்களை உடையவனே அண்டங்கட்கெல்லாம் ஊழியனாகிய சூரியபகவானாவார்.

விண்வாய்ந்த பொருட்களில் மிகப்பெரியதும் ஆக ருஷ்ண சக்தியில் மிகக்கூடியதும் தன்னைச் சூழ்ந்துள்ள கிரகங்களைத் தன்னுணைக்குட் கவர்ந்து தன்னை வலம் வரச் செய்ய வல்லதும், ஆதியந்தமில்லாத, ஏகப்பெருவெளி யின் எல்லையை வகுத்து நிற்பதும், இராசிச் சக்கரத்துக் கும், மண்டலங்கட்கும் மையப் பொருளாக வருவதும், பூமியில் வசிக்கும் எமக்கு வருஷம், ருது, மாதம், திகதி முதலிய காலங்களை வகுத்து நிற்பதும், வாயு, மழை, வெட்ப தட்பம், வளர்ச்சி கவர்ச்சி முதலிய நலனும் பல னுந்தருபொருட்களை வழங்க வல்லதும் சூரியனென்றேயாத லால், சூரியன் நமக்கு எவ்வளவு இன்றியமையாத பலன் களைத் தருபொருளென்பது விளங்கும்.

சூரியனின் பிராகிருதத்தோற்றம் பூமியும் சூரியனும் ஒரேவிதமான பொருட்களால் உற்பத்தியாக்கப்பட்டிருந் தாலும், சூரியனின் பிராகிருத தோற்றமோ பூமிக்கு முற்றி லும் மாறானவிதமாய்த் தோற்றப்படுகின்றது. சூரியனி

லிருந்து நமக்குத் தெரியும் வெண்மையான பகுதி (Photasphere) மிகவும் அழல் மிகுந்த லோகசம்பந்தமான நீராவி போன்ற ஓர் வஸ்துவாகும். வெப்பமும் அவற்றிற்குவமையும் எரிகின்ற பிரகாசமும் அனலும் உடையதென்றும் அவற்றினுடைய ஒளியும் வெப்பமும் ஆகாயத்திற்கூடாகச் செலுத்திக்கொண்டு மிருக்கிற தென்றும் சொல்லப்படுகின்றது. சூரியனுடைய வெப்பத்தினின்று பூமி பெறுவது, 22,70,00,000, பங்காகும். சூரியனின் மேற்பகுதியில் அனற்பதன் (Tempemperature) சுமார் 6000, டிகிரி சூரியனின் மத்தியில் நாலு கோடி டிகிரி.

சூரியன் பூமியிலிருந்து, 9,28,00,000, மைல்களுக்கப்பாலிருக்கின்றது. பூமியிலிருந்து மணித்தியாலம் 400 மைல் வேகத்திற் செல்லக்கூடிய ஆகாய விமானத்தில் பறந்தாலும், 25 வருடங்களிலும் சூரியனை போயடைய முடியாது.

## சூரியனின் அளவு பருமன் முதலியன

சூரியனின் விட்டளவு 8,63246 மைல் ஆகையால் 111 பூமியின் குறுக்களவு சூரியனுடைய குறுக்களவிற்குச் சமமாகும். சூரியனுடைய சுற்றளவு 27,13059, மைல் வரையிருக்கும். 13,30,000 பூமியின் சூரியனுடைய பருமனுக்குச் சமமாகும். திண்மை ஆகருஷ்ணம் பூமியின் செயற்கைப் பொருட்கள் பற்றி சூரியனின் திண்மை (Density) பூமியின் திண்மையின் நாலில் ஒரு பங்கு, 3,30,000 பூமியின் நிறை சூரியனின் நிறைக்குச் சமமாகும். ஆகையால் பூமியில் ஒரு றுத்தல் நிறையுடைய பொருள் சூரியனில் 28 றுத்தல் நிறையுடையதாயிருக்கும். இது சூரியனின் ஆகருஷ்ண சக்தி 28 மடங்கு கூடியதெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சூரியன் அசைவற்ற பொருளென்று வேறு அத்தியாயங்களிற் கூறியபோதிலும் சூரியனும் தனது நாராசத்தில் 25 நாள் 20 நாடி 22 விநாடிக்கொருமுறை தன்னைத்தானே

சுற்றிக்கொள்ளும். மற்றுங் கிரகங்களைப்போல் சூரியனுக்கு அயனப்பெயர்ச்சி கிடையாது. சூரியனில் சில காலங்களில் பூமியிலும் பார்க்க நீண்ட புள்ளிகள் தோற்றப்படுங் காலத்தில் பூமியில் இருப்பவர்கட்கு தொற்று நோய்கள் பரவும் தன்மைகளும் வறுமை பகைமைகளுமுண்டாம். சூரியனில் ஏழுவித வர்ணங்களுண்டு. இவ்வர்ணங்களே விஞ்ஞான சாஸ்திரிகள் கையாளும் நிறங்கள். சூரிய சக்கரம்போன்ற வடிவத்தையும் ஏழுவித வர்ணங்களையும் உடையவனாதலால், பண்டையகாலப் புலவர்கள். சப்தமா என்னும் ஏழு வர்ணக் குதிரைகள் பூட்டிய ஒரு சில்லையுடைய (சக்கரத்தை) தேரினிலமர்ந்து, குணவமிருந்து குடவம் போகின்றான் என்று வர்ணித்துப் பாடியிருக்கின்றார்கள்.

சூரியராஜ்யம் நம்முடைய பெரியோர்கள் நவக்கிரகங்கள் என்று ஒன்பது கோள்கள் வகுத்துள்ளார்கள். மேல்நாட்டவர்களும் (வானசாஸ்திரிகளும்) ஒன்பது கிரகங்களைச் சொல்கிறார்கள். கணக்கு ஒன்றாயிருப்பினும் கிரகங்களில் வித்தியாசமுண்டு. இவ்வொன்பது கிரகங்களாவன. விஞ்ஞானிகள் முறைப்படி, புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரானஸ், நெப்டியூன், ப்ளூட்டோ, ஆகிய ஒன்பதுமாகும். சூரியன், சந்திரன், ராகு கேது முதலியன கிரகங்கள் அல்ல, சூரியன் தானாகவே ஒளிபரப்பும் ஓர் நட்சத்திரம். சந்திரன் பூமியின் ஆகர்ஷண சக்திக்குட்பட்டுப் பூமியைச் சுற்றிவரும் ஓர் உபக்கிரகம். ராகு கேது, ஆகாயத்தில் சந்திரன் பூமியைச் சுற்றி வருகின்ற மார்க்கத்தில் உள்ள இரண்டு ஸ்தானங்களென்று தற்கால வான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நாம் வாழும் படியான இப்பூமண்டலமும் ஒரு கிரகமென்பதை இன்று அறிவோம். ஆகவே, இச்சோதி வஸ்துவான சூரியபகவானை, தற்கால முறைப்படி முதல் புதன், சுக்கிரன், சந்திரன் பூமியும் ராகு கேதுகளும் செவ்வாய், கூட்டக் கிரகங்களும், குரு, சனி, யூரானஸ், நெப்ட்டியூன், ப்ளூட்டோ இதற்கு மேலும் தூம கேதுக்களும் இவையெல்லாம் சூரியனுடைய கவர்ச்சிக்குட்

பட்டுச் சூரியனை ஓர் நீள்வட்டப் பாதையில் பிரதட்சிணம் செய்கின்றன.

வெள்ளி முளைச்சுப் போச்சு விடியற்காலம் ஆகிப் போச்சு, என்று நம்மவர்கள் பேசக்கேட்கின்றோம். விடி வெள்ளி என்ற ஜோதி தோன்றிவிட்டது. இனிச் சூரியனை வெகுவிரைவில் காணப்போகிறோம் என்று அர்த்தம். இந்த வெள்ளியைத்தான் நாம் சுக்கிரன் என்று சொல்கிறோம். இச் சுக்கிரன் சூரியனுக்குப் பின்னால் ஓடும் போது சூரிய உதயத்திற்கு முன் விடிவெள்ளியாகக் கிழக்கு வானத்தில் தென்படுவார். சூரியனுக்குப் முன்னால் ஓடும் போது சூரிய அஸ்தமனத்திற்குமேல் மேற்கு வானத்தில் மாலை வெள்ளியாகத் தென்படுவார். ஆகவே 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் முதலாந் திகதி தொடக்கம் இச் சுக்கிரன் கிழக்கு வானத்தில் விடிவெள்ளியாக சூரியனுடன் அஸ்தமனப்பட்டு ஒரே பாதையில் ஓடி அக்டோபர் முதலாந் திகதியளவில் மேற்கு வானத்தில் உதயமாவார். இப்போ இச் சுக்கிரனின் பெயர் மாலை வெள்ளியாகும். ஆகவே சுக்கிரன் வீடாகிய இடப துலா லக்கினத்தில் பிறந்தோர்கள் உதவி பெற இன்னொருவர் ஆதிக்கத்திலிருந்து மனம் அமைதியின்றி இந்த இரு மாதங்கள் களிந்ததும், தங்கள் கருமங்களில் சித்தியடைவார்கள். சிலருக்குப் பட்டம் பதவி விலாச மாற்றமும். இப்போ பாடு அஸ்தமனம் கிட்டத் தட்ட இரண்டு மாதம் வரை இச் சுக்கிரனைக் காண முடியாது. மூடமாயிருக்குமென்பார்கள். காலை வெள்ளியாக 292 நாட்களும், மாலை வெள்ளியாக 292 நாட்களுமாகும். சுக்கிரன் சூரியனை 224 நாட்களில் சுற்றிவரும்.

செவ்வாயின் வக்றம், தற்போது 1971 யூலை 17ந் திகதியிலிருந்து கும்பராசியிருந்து வக்றமாகி ஆகஸ்ட் 18ந் திகதி மகர ராசிக்கு வந்து உச்சம் பெறுவார். இதுகாலம் சூரியனுக்கு 7ம் ராசியில் செவ்வாய் வருவதால், இச் செவ்வாய் பூமிக்கடுத்த கிரகமாகி பூமிக்கு வெகு சமீபத்தில் சங்கமமாவதினால் பூமியில் இருப்பவர்கட்குள், ஒற்றுமைக்

குறைவுகளும் பாகப்பிரிவினே, பாஷைப் பிரிவினே அரசர் பெரியோருக்காகாமைகளும், பூகம்பம் பூமி நடுக்கம் மண் சரிவு அக்கினி ஆயுத பயம் அரசியல் சூழ்ச்சிகளும் பூமி யாதிக்கமானேர் பாடு திண்டாட்டங்களும் யுத்த பயங்க ளுமுண்டாவதோடு உள் நாட்டுக் கலகங்களுமுண்டாம்.

சூரியனிலிருந்து பூமிக்கடுத்த கிரகம் செவ்வாய் சூரிய னிலிருந்து இவற்றின் தூரம் சுமார் 14 கோடி மைல்க ளாகும். சூரியனே 687 நாட்களில் சுற்றி வரும் இப்போ இச் செவ்வாய் பூமிக்குக் கிட்டவாக வந்தமையால் தற் காலம் ஐந்து கோடி மைல்களேயாகும். இப்போ பூமியும் செவ்வாயும் சங்கமமான காலமாகும். பொதுவாக வாசக நேயர்கள் நெஞ்சில் வைக்கவேண்டியது பூமிக்கேழாம் ராசி யில் சூரியனும் சூரியனுக்கேழாம் ராசியில் பூமியுமியங்கும் என்பதை வைப்பதோடு இப்போ சூரியனுக்கேழாம் ராசி யில் செவ்வாய் வந்ததால் பூமி செவ்வாய் சங்கமமென லாம். இச் செவ்வாய் சூரியனேடு கூடும் போது பூமியிலி ருந்து 24 கோடி மைல்களாகும்.

பூகோள ராசிப் பிரயாணத்தின் படி கிறினிச் பூகோ ளப்பாகை மகரராசியில் இருப்பதால், செவ்வாய் மகரராசி யில் வந்து உச்சம் பெறும் போதெல்லாம் ஐரோப்பாவில் அரசியல் கொந்தளிப்புகளும் சட்ட திட்ட அரசியல் நிர் ணயங்கள் புதுப்பித்தலும் மகரராசியில் இப்போ சென்ற பெப்ரவரி மாதத்தில் ராகுவும், கடக ராசியில் கேதுவுமாக இருப்பதால் கடக ராசியாகக் காணப்படும். பசிபிக் சமுத் திரம் 180 பாகைப் பிரதேசம் (டேற்லயின்) திகதி மாறும் ரேகை அலாஸ்கா பிரதேசங்களிலும் பெரும் அரசியல் கொந்தளிப்புகளுண்டாம். பீசித்தீவிலுமிருக்குமென்பதாம்.

சூரியன் தாவரம் ஜங்கமம் என்னும் அனைத்தின்ஆன்மா சராசரங்கட்கு ஆதாரம் ரிஷி. அதற்கு மித்திரன் (நண்பன்) இந்த மித்திரன் மக்களைக் கூவியழைத்து அவர்களைத் தம் பணியில் ஈடுபடுத்துகிறுன். அவன் சுவர்க்கத்தையும் புவி

யையும் தாங்குகின்றான். உண்மையிலேயே சூரியன் வாழ்க்கைக்கு ஆதாரமானது அதில் பரம் பொருளைப் பார்க்கலாம் அதன் காட்சி பரம் பொருளின் காட்சி போன்றதே.

ஓவியன் சூரியோதயக் காட்சியை வரைந்து வர்ணம் தீட்டுகிறான். ஆனால் நீ காலையில் எழுந்து அந்த ஆண்டவனின் கலைத்திறனின் மகிமையைக் கொஞ்சம் கண்திறந்து பாரேன்: அத் தெய்வீகக் கலையை, அந்த எல்லையில்லா வனப்பை, எதனுடன் ஒப்பிடலாம்? ஆனால் அதை யார் பார்க்கிறார்கள்? அங்கே அழகிய ஆண்டவன் நின்று கொண்டிருக்க இங்கே அவன் முகத்தின் மீது போர்வையை இழுத்து மூடிக் கொண்டு குறட்டை விடுகிறானே! சூரியன் ''ஏ—சோம்பேறியே! நீ படுக்க விரும்புகிறாய். ஆனால் நான் உன்னை எழுப்பி விடுகிறேன் பார்! என்று சொல்லித் தன் உயிர்க் கிரணங்களைப் பல கணி வழியே உள்ளே செலுத்தி அச்சோம்பேறியை எழுப்பி விடுகிறது. இச்சோம்பேறிக்கு ஞானம் உதயமாகிறது. புத்தி தன்னளவிலே அறிவற்றதாயினும் எங்கும் பரந்த ஈசுவர அறிவால் (சைதன்யத்தால்) விளக்கம் பெறும் இயல்புடையது. சூரியனால் ஒளியுடையதாக (விளங்கும் படி) ஆக்கப்படும் சந்திரன் தானே ஒளிரும் பொருளெனத் தோன்றுவது போல, புத்தியும் எங்கும் பரந்த ஈஸ்வர அறிவொளியின் பரிசத்தால் தனக்கென அகங்காரம் கொண்ட தனிப்பட்ட அறிவுடைய ஜீவனாகத் தோன்றுகிறது! அறிவுக்கு மூலம் ஈசனேயன்றி வேறொன்றில்லை! புத்தி வேறொன்றினின்றும் பெற்ற அறிவால் ஒளிர்கின்றது. அது ஈசுவரனைப் பிரதி பலிப்பதால் உண்டாகும் ஒரு பிரதி பிம்பத்தை பற்றிக் கொள்கிறது எனலாம். இது குடத்து நீருக்குள் தெரியும் சூரியனைப் போன்றனவாம்.

# மனிதனை பிரமத்தை நோக்கி - அழைத்துச் செல்லும் - ஒப்பற்ற மார்க்கம்!

- அருள் சத்தியநாதன்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவில் அதன் கலை, நாகரிக, கலாச்சாரத் துறைகளை உலகின் அன்றைய முதிர்ந்த நாகரிகங்கள் தரத்திற்கு வளர்த்து, பாரதத்தின் உயிர்த்துடிப்பாக விளங்கியது இந்து தர்மம். கல் தோன்றி மண்தோன்றுக் காலத்திற்கு முன் தோன்றியதாகத் தமிழ் எவ்விதம் கருதப்படுகிறதோ, அதற்கு மேலேயே, உலகின் ஆதி சமயம் ஒன்று இருந்திருக்குமானுல் அது இந்து தர்மமாகவே இருந்திருக்கும் என்று கருதப்படுகிறது. இந்தியாவின் பண்டைய சரித்திரம் உலகின் கண்ணுக்கு எவ்வளவு தெரிகிறதோ, அவ்வளவு தூரமும் இந்து தர்மம் செழிப்புடன் சரித்திரத்தோடு கலந்திருப்பதும் தெரிகிறது. அதன் செழிப்பைப் பார்க்கும் போது, சரித்திரத்திற்கு முற்பட்ட ஆதி நாட்களிலும் அது செழிப்பாக இருந்திருக்கிறது என்பது கண்கூடாகத் தெரிகிறது.

இந்தப் புராதன மார்க்கம், மத்திய காலத்தின் பின்னுல், பலவித குறுக்கீடுகளினுலும், மேற்கத்தியத் தொடர்புகளிலும் தாக்குதலுக்கு உட்பட்டு, நலிவுற ஆரம்பித்தது. மூட நம்பிக்கைகள், சாதிக்கட்டுப்பாடுகள், குறுகிய கோட்பாடுகள் ஆகியவற்றின் காரணமாகவும், சமயத்தில் படிந்த மாசுக்கள் காரணமாகவும் இத் தர்மம் பொலிவை இழக்கலாயிற்று. இந்நிலை 19-ம் நூற்றுண்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலக ஆரம்பித்தது. ராமகிருஷ்ணரிடத்திருந்து, ஆன்மிக வெள்ளம், ஆங்கிலம் கற்ற விவேகானந்தர்

மூலம் உலகின் பெரு நாடுகளின் மீது பாய்ந்து நிறைந்தது. அரவிந்தகோஷ், மகாத்மாகாந்தி ஆகியோர் தோன்றி உலகம் முழுவதும் இந்து சமயத் தத்துவங்களையும், விஞ்ஞானத்திற்குப் பொருந்திய வேதாந்த உண்மைகளையும் முரசறைந்தார்கள். சமயத்தின் மாசுக்களை அகற்றி, அது உரைக்கும் வியத்தகு உண்மைகளை, மனிதனை அமரனுக்கும் அற்புத மார்க்கங்களை உலகிற்கு உரைத்தார்கள். இந்து என்ற சொல்லுக்கு, 'வெறும் விக்கிரக ஆராதனைக்காரர்கள்' என்று பொருள் கொடுத்தவர்கள், மிக விரைவாகவே அதனை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

## இந்து தர்மத்தின் தனித்துவம்:

கிறிஸ்துவத்தின் ஆதாரமாக பைபிளும், அதைத் தோற்றுவித்த இயேசுவும் விளங்குவது போல, முஸ்லிம்களுக்கு குர்ஆன் ஆதாரமாகவும், ஒரே கடவுளாக அல்லா விளங்குவது போல, புத்தபிரானும், தம்ம பதம், திரிபிடகங்கள் பௌத்தத்திற்கு அடிப்படையாக விளங்குவதுபோல, இந்து தர்மத்திற்கு எனத் தனிக் கடவுளோ, சமயத் திரு நூலோ இல்லை. என்றுவது, ஸ்தாபிக்கப்பட்ட இச்சமயங்களின் திருநூல்கள் சரியானவை அல்ல என்று நிரூபிக்கப்பட்டால், அக்கணத்திலேயே அவை நிலைகுலைந்து சரிந்துவிடும். ஆனல், இந்து தர்மத்திற்கு இந்நிலை இல்லை. எக்காலத்திலும், யாராலும் இது தோற்றுவிக்கப்பட்டது அல்ல. அப்படி தோற்றுவிக்கப்பட்டதற்கான அடையாளங்கள் ஒன்றையும் இச் சமயத்தில் காணேம். இது ஆதியற்றது. ஆதியற்ற எதற்கும் அந்தமிருக்க முடியாதாகையால், இதற்கு அந்தமுமிருக்க முடியாது. ஏராளமான கிளைகளையும், எண்ணற்ற உயர் தத்துவங்களையும் உடைய இதற்கு தனியொரு கொள்கையோ, மகானே, புத்தகமோ தலைவனுயில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வழங்கி வந்த இந்து தர்மத்தின் சுதந்திர நிலையைக் கைப்பற்றவோ, முழு இந்துக்களுக்கும் கட்டளையிடவோ, தலைமைப் பீடங்களை அமைக்கவோ, ஏனைய சமயங்களைப் போல வரையறைக்குட்படுத்தவோ யாராலும் இய

லாது. ஏனெனில் இது யாராலோ, ஏதாவது புத்தகத்தினுலோ தோற்றுவிக்கப்பட்டது அல்ல. அன்பும், கருணையுமே இதற்கு அரண். உலகமே, இயற்கையே ஆதாரம். வேதங்கள், உபநிடதங்கள் பேசுகின்ற பிரகாரம் சமயக் கிரியைகள் இன்றும் மாருமல் நடைபெறுகின்றன.

'கடவுள் தரிசனத்திற்கும், மனதிற்கும் அப்பாற்பட்டவர். அவர் மனிதனுக்கு எட்டாக் கனி. அவரது இருப்பிடத்தை அடைய வேண்டுமானுல், அவரை நோக்கி மன்ருடி உருகுக' என்பதுவே இன்று அனைத்து சமயங்களும் கடவுளைக் குறித்து பக்தர்களுக்கு உரைப்பதாக குருக்கள் பேசுகிருர்கள். ஆனுல் இந்து சமயம் இங்கு வேறுபடுகிறது, 'நூலிலே கோர்க்கப்பட்ட மணி போல' தன்னிலே சமயங்கள் அமைந்திருப்பதாக கீதாசாரியன் உரைப்பதாகக் கூறும் இந்து தர்மம், ஜீவாத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் இடையில் அடிப்படை வேற்றுமை இல்லை என்று உரைக்கிறது. 'நீயே மிக உயர்ந்த பரமாத்மா. யாரை அடைய வேண்டுமென்று நினைக்கிருயோ அதுவே நீ. உன்னை நீயே அறிவாய்' என்று உரைப்பது இந்து தர்மம் ஒன்றே. உலகிற்கு பிரபஞ்சங்களுக்கு அப்பால் கடவுள் இருப்பதாகக் கூருமல், நம்மிடையே நாமாக, உலகாக, பிரபஞ்சமாக பரமாத்மா ஆகியிருப்பதாக இந்து தர்மம் உரைக்கிறது.

'ஏ கடவுளே! நான் பாவி வலியற்றவன். என்னை வலிவடையச் செய்க. நகர ஆக்கினையினின்று இரட்சிக்குக' என்று ஒருவன் பிரார்த்தனை செய்வதால், அவன் தன்மேல் நம்பிக்கையை இழந்துவிடுகிருன். கொஞ்ச நஞ்சமிருந்த ஆத்ம சக்தியும் அவனைவிட்டுப் போய், சாதனை நிலையிலிருந்து கீழே பல படிகள் தள்ளப்பட்டு, மன வலிமை மிகக் குன்றிப் போகிருன். இந்து தர்மமோ அவ்வாறு சாதகனுக்கு ஆலோசனை வழங்குவதில்லை.

''சக்தி மிக்க மனமே அடங்குவாய்! உன் சிந்தனை. செயல் அனைத்தும் கடவுளை நோக்கித் திரும்பட்டும். ஏ கடவுளே! நீயே நான். உன்னை என்னில் காணுவதற்கான

முயற்சிகள் என்னில் தொடர்ந்த உறுதியாக நிகழ்வதாக'' என்று ஒரு இந்து பிரார்த்தனை செய்வதால், அவனது ஆத்மிக நிலையில் படிப்படியான விருத்தி ஏற்படுவதோடு, மன வலிமையும் நிறைய அடைகிறன்.

இந்து தர்மம் மூட நம்பிக்கைகளின் பிறப்பிடம் என்று சொல்லப்படுவதுண்டு.

சைவம், வைஷ்ணவம், கணபத்யம், சாக்தம், கௌரம், முருகவழிபாடு ஆகிய ஷண்மதங்களோடு, வேதாந்தம், உபநிடதங்கள், சிறுதெய்வ வழிபாடு ஆகிய பல்வேறு வழிபாட்டு முறைகள் இணைந்த சமயத் தொகுதியே இந்து சமயம் ஆக அழைக்கப்படுகிறது. ஏராளமான உபகிளைகளுடன் கூடிய பெரு நதி என்று சொல்லலாம். இந்தக் கிளைகள் ஒன்றிற்கு ஒன்று கருத்து வேறுபாடு உடையவைகளாகவும், முரண்பாடானவைகளாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நதிக்குப் பல கிளைகள் இருந்தாலும் எல்லாக் கிளைகளும் ஒரே நீள அகல ஆழமுடையனவாக இருப்பதில்லையே! ஆனாலும் இறுதியில் அவை கடலைத் தானே அடைகின்றன!

மற்ற சமயங்களைப் போலல்லாது, இங்கே சாதகர்கள் பின்பற்றுவதற்காகப் பல வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனெனில்,

ஆன்ம வளர்ச்சி அனைவருக்கும் ஒரே மாதிரியாயிருப்பதில்லை. சிலருக்கு சிறிதும் வளர்ச்சியின்றி இருக்கும். சிலர் பாதி வளர்ச்சியடைந்த நிலையில் மேலே என்ன செய்வது என்று தெரியாதிருக்கலாம். இப்படிப் பலப் பல. இந்த வேறுபட்ட நிலையிலுள்ளவர்கள் அனைவருக்கும் ஒரே வழியைக் காட்டிப் பின்பற்றச் சொல்வது சரியன்று. வயிற்று வலி என்று டாக்டரிடம் செல்பவர்கள் அனைவருக்கும் அவர் அஜீரணத்திற்கான மருந்தைக் கொடுப்பாரா? வயிற்றுவலி பொதுவானதாயினும், அதற்கான காரணம் பொதுவாயிருக்காதே! இது போல, அனைவர்க்கும் ஒரே பாதையைக் காட்டாமல், அவரவர்க்குத் தேவையான நெறி

யைத் தெரிந்தெடுக்க சாதகர்களுக்கு சமயம் ஒத்துழைக்க வேண்டும். எட்டாம் வகுப்பு மாணவனுக்கு அந்நிலையிலிருந்தே கல்வி புகட்ட வேண்டும். இரண்டாம் வகுப்பு மாணவனுக்கு அவனது தரத்திற்கேற்பவே கற்பிக்க வேண்டும். அப்போது தான் அவன் தொடர்ந்து அறிவு விருத்தி பெற்று இறுதியில் அரசாங்கத் தேர்வில் சித்தியடைவான். இந்து தர்மத்தில், சாதகர்களின் நிலைக்கு ஏற்ப பல தரங்களில் வழி முறைகள் இருப்பதால், அவனவன் நிலையிலிருந்தே மெல்ல மேலே பிரமத்திடம் அழைத்துச் செல்லப்படுகிறான். இம் முறை, சாதகனுக்கு மாத்திரமல்ல, சமயத்தின் கட்டுக்கோப் பிற்கும் மிக நல்லது. இம்முறை இல்லாததினால் தான்மிகப் பெரும் தத்துவச் செறிவுள்ள பௌத்தம் அதன் இலட்சியத் தில் இருந்து சூப்புற விழுந்தது.

அனுபவ ரீதியில், உலகில் மிகச் சிறந்த கருத்துக்களை புத்தர் கண்டார். அவை ஞானத்தில், தத்துவத்தில் முதிர்ச் சியடைந்தவர்களுக்கே ஏற்றதாக, உணரக்கூடியதாக இருந் தன. சாதாரண மக்களுக்கு இவை புரிவதில்லை. ஆனால் நடந்தது என்ன? அனைவர்க்கும் — உயர் படியிலிருப்போர் முதல் கடைசிப் படியில் இருப்போர் வரை—தனது போதனை களை பகவான் புத்தர் பரப்ப நினைத்தார். அவரது அந்த அளவற்ற கருணையே தவறாயிற்று. அவரை, அவரது கருத் துக்களை சரியாகப் புரிந்து கொள்ளாது, புத்தர் மறைந்த500 ஆண்டுகட்கு உள்ளாகவே விக்கிரக ஆராதனையை எதிர்த்த வரது உருவைச் செய்து வணங்கியும், இன்னும் பல தவறு களைப் புரிந்தும் சமயத்தை வீழ்த்தினர். இந்து சமயத்தில் முதிர்ச்சியடைந்தவர்களுக்கு ஒருமார்க்கமும், கீழானோருக்கு ஒரு மார்க்கமும், மத்திய தரத்தினருக்கு ஒரு மார்க்கமுமாக பல வழிகள் காட்டப்பட்டுள்ளன.

ஒரு இந்துவின் சமய வழிபாடு விக்கிரக ஆராதனையுடன் தொடங்குகிறது. விக்கிரகத்தைக் கடவுளாகப் பாவித்து தன் அன்பை அதற்குச் சொரிகிறான். பெரியவர்களின் உரு வச்சிலை, படங்களுக்கு நாம் அஞ்சலி செலுத்துகிறோமில்லை

யா, அவர்களை நேரில் சந்தித்து பேசுவதற்குப் பதிலாக அதே போல பக்தன் எங்கும் நிறைந்த இறைவனை வணங்குவதற்காக, உருவச் சிலை ஒன்றை, புனித சின்னமொன்றை அவ்விதம் பாவித்து அதை இறைவனுகக் கொள்கிருன். அவன் மேலே முன்னேறுகையில் உலகில் மூன்றே மூன்று பொருட்களே உண்டு என்பதை அறிகிருன். உலகு, ஐந்து பூதங்களினுல் ஆனது என்ற அவன் கருத்து இங்கே சிதறுகிறது. அது, இயற்கை, ஆன்மா, கடவுள் என்று அறிகிருன். இது துவைதம் என்று அழைக்கப்படுகிறது. சாதகன் மேலும் ஆன்மிகப் பயிற்சிகளில் தேறுகின்ற போது உலகு மூன்று பொருட்களால் ஆனதன்று, இரண்டே பொருட்களினுலேயே உலகம் ஆக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிருன். ஆன்மாவினுலும், கடவுளினுலும் ஆனதே உலகம் (உலகம் எனும் போது இப்பூமி மாத்திரமல்ல எல்லையற்ற முழு அண்ட வெளியையும் அது குறிக்கிறது) இங்கே இயற்கைக்கு அர்த்தமின்றிப் போய் விடுகிறது. ஆன்மாக்களின் தொகுதிதான் உலகம் என்ற இந்நிலை, விசிட்டாத்து வைதம் (த்வைதம்) என வழங்கப்படுகிறது!

சாதகன் இறுதியாக அடைய வேண்டிய நிலை தான், அத்வைதம் உலகில் இரண்டாவது என்று ஒன்று கிடையாது. அனைத்தும் ஒன்றே. அனைத்தும் மிக உயர்ந்த கடவுளின் வடிவங்களே என்று அத்வைதம் உரைக்கிறது. எமது ஊனக் கண்களுக்கு, ஆத்மாவின் மாசு காரணமாக உலகம் இரண்டு அல்லது மூன்று பொருட்களினுல் ஆனது என்றும் எண்ணற்ற பொருட்களினுலானது என்றும் தெரிகிறது. இந்த மாயத்திரை ஞானத் தீயினுல் கருகப்படும் போது, நான் நீ அனைத்தும் ஒன்றேயான இறைவனே என்று அறிகிறோம் என்கிறது, சங்கரரின் மாயாவாதக் கொள்கை.

இந்து தர்மத்தின் அழைத்துச் செல்லும் வழியும், அதன் ஒப்பற்ற இலட்சியமும், பெரும் சிறப்புக்குரியவை. மனிதன் அமரனுக, மனிதன் புத்தனுக தெளிவான வழி, இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

சங்கரர் அத்வைதத்தை நிறுவுவதற்கு முன் மக்கள் எவ்விதம் அழைத்துச் செல்லப்பட்டிருப்பார்கள்? என்று சிலர் கேட்கலாம். விக்கிரக ஆராதனை, உருவக் கடவுள் ஆகியன புத்தருக்குப் பின்பு தோன்றியவையே. இராமர் லிங்க பூஜை செய்ததாகத் தெரிகின்றபடியால், கல்லை வணங்கும் முறை அப்போதே இருந்திருக்கிறது. அதற்கு முன், உலகின் காலை நாட்களில், பாரதத்திலே இயற்கை வணக்கம் இருந்திருக்கிறது. சூரிய வழிபாடும் இருந்திருக்கிறது. முனிவர்கள் இயற்கையை வணங்கி ஆத்மானுபூதியடைந்திருக்கிறார்கள். ஆக. இயற்கை வழிபாட்டு முறை அதாவது அத்வைத சித்தாந்தம் அப்போதே இருந்திருக்கிறது. ஆனால், கொள்கையாக, வழிபாட்டு முறையாக இல்லாமல் முனிவர்களின் மனத்திலே மிளிர்ந்திருக்கிறது. அது மட்டுமல்ல, த்வைதம், துவைதம் முதலிய கோட்பாடுகளும் காடுகளிலே வாழ்ந்திருக்கின்றன. வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவை முனிவர்களிடையே வழங்கிவந்திருக்கின்றன.

இந்தியாவில் நாகரிக மேம்பாடு ஏற்படவும், பல சாதியார் ஒன்றுபடவும், கலை, கலாச்சார பிரிவினைகள், துவேஷங்கள் ஏற்படவும், குழப்பம் உருவாகவும் இந்து தர்மத்தின் தெளிவான நோக்கிலே குறுக்கீடுகள் தோன்றின. சாதிகள் உண்டாகவும், கடவுளைப் பங்குபோடும் எண்ணங்கள் தோன்றின. அப்போதுதான், இந்து தர்மத்தின் தெளிவான கோட்பாடுகளிலே பல வெளியலங்காரங்கள் புகுந்து உண்மையை மறைத்தன. இந்நிலையில்தான் சமயப் பெரியோர்கள் தோன்றினர். மத்துவர் தோன்றினர் துவைதத்தை நிலைநாட்ட கிருஷ்ணர் தோன்றினார். (கிருஷ்ணாவதாரத்தை நம்பாதவர்களுக்கு ஒரு வார்த்தை; கிருஷ்ணர் என்று ஒருவர் தோன்றவில்லை என்று வைத்துக்கொண்டாலும் சரி, கீதையிலே சொல்லப்பட்டுள்ள ஒப்பற்ற வாக்கியங்கள் உலகின் அதி சிறந்த மூளையிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். இதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆக, கிருஷ்ணாவதாரத்திலே சொல்லப்பட்டிருக்கிற குணங்களை,

சக்திகளையுடைய ஒருவர் உலகில் இருந்திருக்க வேண்டும்.) கீதை என்ற மிகப்பெரும் தத்துவ செறிவுள்ள புத்தகத்தை ஆக்க, ராமானுஜாச்சாரியார் விசிட்டாத்துவத்தை நிலை நாட்டினார். இவற்றிற்கு மகுடமாக, சங்கராச்சாரியார் அவதரித்தார். காடுகளிலே, முனிவர்களிடையே பிரகாசித்த அத்வைத சித்தாந்தம் கொள்கையாக தத்துவமேற்கோள்களுடன், உலகிற்குப் பொதுவாக மலர்ந்தது. நாட்டிலே மின் சக்தியை அனைவர்க்கும் வழங்க வேண்டுமானால், நாட்டில் பாயும் நதிகள் அனைத்திலும் அணைக்கட்டுகள் கட்டி மின் உற்பத்தியை பெருக்குவது அவசியம் ஆகிறது அல்லவா? அது போலவே, ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஏற்படும் நாகரிக, பொருளாதார மலர்ச்சிக்கு, சிந்தனை வளர்ச்சிக்கு ஏற்ப, சமயங்களும் அவற்றிற்கு ஈடாக தமது செல்வத்தை அள்ளித்தர வேண்டாமா? அணைக்கட்டுகள் இன்றி நாடு ஒளிபெற முடியாது என்பதைப் போல, சமயத்தின் அஸ்திவாரமின்றி எந்த நாகரிகம் உருப்பட முடியும்? மக்கள் தேவை அதிகமாக, சமயங்களும் அவற்றை ஈடுசெய்வதற்காக, மகான்களை உற்பத்தி செய்கிறது. இந்து சமயப் பிரிவுகள் பிளவுண்டபோது, சங்கரர் தோன்றி ஷண்மதத்தைத் தாபித்தார். காலம் மாறியது. முஸ்லிம், கிறிஸ்துவம், புத்தம், சீக்கியம் ஆகிய சமயங்கள் தமக்குள் போட்டியிட்டு இந்துதர்மத்தை விழுங்க முயற்சித்தபோது 'கடவுள் ஒருவரே; சமயங்களின் அடிப்படையே ஒன்றுதான். சமயங்கள் கொள்கையளவிலேயே பிரிகின்றன' என்று ராமகிருஷ்ணர் தோன்றி அருளினார். இது போல, பிரச்சினைகள் கூடக்கூட, மகான்களும் தோன்றி புதுப்புது கருத்துக்களை, வேதங்கள், உபநிடதங்கள், அதன் சாரமாகக் கருதப்படும் பகவத்கீதை ஆகியவற்றின் மேற்கோள்களுடன் நிலைநாட்டுவர். இதிலுள்ள விசேடம் என்னவெனில், கீதை, உபநிடதங்கள், வேதாந்தம் முதலியன எப்புது கொள்கைக்கும் ஆதாரத்தை தன்னிலிருந்து காட்டுவதுதான். எந்த நோக்கோடு அணுகுகிறோமோ அப்படி அது காட்சியளித்து எம்மை நிறைவுகாண வைப்பது இவற்றின் சூட்சுமமாக இருக்கிறது.

'சாதகர்களின் ஆன்ம மலர்ச்சியைப் பொறுத்து அவர்களை அந்தந்த நிலையிலிருந்து மேலே உயர்த்துவதற்காகவே பல வழிகள் கையாளப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவை வெவ்வேறான மார்க்கமன்று. இந்து தர்மத்தின் உயர் இலட்சியத்திற்கு ஆன்மாக்களை அழைத்துச் செல்கின்றன. ஆகவே, இது உண்மையானால், இந்த ஒவ்வொரு மார்க்கமும், தன்னுடைய வழியே சரி; முடிவானது என்று உரைப்பானேன்?' என்று சிலர் கேட்கலாம்.

இந்து சமயத்தின் நோக்கமே, வேறுபாடு அற்ற 'ஒன்றே' என்ற பெரு நிலைக்கு ஆன்மாவை இட்டு செல்லுதலே. ஆகவே, வேற்றுமை என்பது ஒருபோதுமிருக்க முடியாது. மத்துலாச்சாரியார், ராமானுஜாச்சாரியார், சங்கராச்சாரியார் ஆகியோர் வகுத்த துவைதம், த்வைதம், அத்வைதம் ஆகிய கோட்பாடுகள் தத்தமது கொள்கையே முடிவானது என்று உரைத்து, ஏனைய சமயத்திரு நூல்களிடத்திலிருந்து ஆதாரம் காட்டியிருக்கிறார்கள். இதற்கு மூவருமே கீதையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கீதையின் சிறப்பம்சத்தை முன்பு நாம் அறிந்ததைவிட, இன்னொரு உண்மையும் எமக்கு இங்கே புலப்படுகிறது. அதாவது, கீதையிலே, இம் மூன்று பிரிவுகள் மாத்திரமல்ல, இன்னும் ஏராளமான கோட்பாடுகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே. இப்போது புதிது புதிதாக உரைக்கப்படுகின்ற கோட்பாடுகள், சித்தாந்தங்கள் அனைத்துமே, கீதை காலத்திற்கு முன்பேயே இந்து தர்மத்திலே இருந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. ஆகவே, மார்க்கங்கள் தனித்துவம் உடையன அல்ல என்று அறிகிறோம். இதைத் தவிர, இன்னொரு காரணமும் சொல்லலாம்.

(தொடரும்)

---

★ அடக்கமும், ஒழுக்கமும், அன்பும், கட்டுப்பாடும் இல்லாதவன், துன்பத்திற்கு ஆளாவான்.

★ அன்பும், நேர்மையும் பொறுமையுமே உனக்கு ஆபரணமாக இருக்கட்டும்.

—ஸ்ரீ சாந்தானந்தர்

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவு தனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)**

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300.

# சந்தா நேயர்களின் முக்கிய கவனத்திற்கு!

1. சந்தா செலுத்தாதவர்கள் அத்தனை பேருக்கும் நினைவூட்டல் கடிதம் எழுதியுள்ளோம். சிரமம் பாராது உரியதொகையினை உடன் அனுப்பிவைத்துச் சோதியின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகின்றோம்.

2. சந்தா அனுப்புவோரும் விலாசமாற்றம் செய்வோரும் தத்தம் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட விரும்புகின்றோம். அங்ஙனம் குறிப்பிடுவதனால் காரியாலய வேலை இலகுவாகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

3. ஆயுள் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் நூறு ரூபாய் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். ஆயுள் சந்தாதாரராகச் சேருவதனால் சோதியின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தவர்களாவீர்கள்.

4. தங்கள் நண்பர்களில் ஒருவரையாவது சந்தாதாரராகச் சேர்த்து உதவினால் சோதியின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்தவர்கள் ஆவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையத்தினர்.
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 17-8-71.